# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035
தொலைபேசி எண். 044 - 2951 5590

**<u>ஆணை நாள் – 03.04.2025</u>**

**<u>முன்னிலை</u>**

**திரு முகம்மது ஷகீல் அஃதர், இகாப (ஓய்வு)**
**மாநில தலைமை தகவல் ஆணையர்**

*****

**<u>வழக்கு எண். CP-4529/SCIC/2022</u>**

திரு M. காசிமாயன் — புகார்தாரர்
எண்.70 தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய
குடியிருப்பு
அயப்பாக்கம், சென்னை 600 077.

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர்/
அரசுச் சார்பு செயலாளர்
பொது (சிறப்பு அ) துறை --- பொது அதிகார அமைப்பு
தலைமைச் செயலகம்,
சென்னை 600 009.

**<u>ஆணை</u>**

இவ்வழக்கில் 04.02.2025 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு கீழ் கண்ட ஆணை பிறப்பிக்கப்பட்டது:

> **“மனுதாரருக்கு அவர் கோரியவாறு முதல்வர் மற்றும் மற்றவர்கள் பயணம் மேற்கொண்ட விமானப் பயணம் குறித்த டிக்கட் செலவு மற்றும் Hotel Rooms expenses ஆகியவற்றை ஒரு மாத காலத்திற்குள் ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவு தபால் மூலமாக வழங்கி அதனை மனுதாரர் பெற்றுக் கொண்டார் என்பதற்கான ஆதாரமாக அவரிடமிருந்து பெறப்பட்ட ஒப்புகை அட்டை மற்றும் மனுதாரருக்கு அனுப்பப்பட்ட பதில்**

**கடிதம் ஆகியவற்றை 12.03.2025 அன்று நேரில் ஆஜராகி சமர்பிக்க வேண்டும் என பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடப்படுகிறது.".**

2. மேற்குறிப்பிட்ட ஆணைக்கிணங்க பொதுத் தகவல் அலுவலர் 12.03.2025 அன்று நேரில் ஆஜராகி மனுதாரர் கோரிய தகவல்களை வழங்க மேலும் இரு வார கால அவகாசம் வழங்குமாறு ஆணையத்திடம் கோரிக்கை வைத்ததன் பேரில் அவருக்கு இரு வார கால அவகாசம் வழங்கப்பட்டு 03.04.2025 அன்று நேரில் ஆஜராகி மனுதாரருக்கு வழங்கப்பட்ட தகவல்கள் குறித்த அறிக்கையை ஆணையத்தின் முன் தாக்கல் செய்ய வேண்டும் என தெரிவிக்கப்பட்டிருந்தது.

3. இன்று (03.04.2025) திரு M. Sanjay Kumar, உதவிப் பிரிவு அலுவலர், நேரில் ஆஜராகி ஆணையம் உத்தரவிட்டவாறு மனுதாரருக்கு 18.03.2025 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக தகவல்கள் அனுப்பப்பட்டுள்ளதாக தெரிவித்து அது தொடர்பான ஆவணங்கள் மற்றும் Postal Trackingஐ ஆணையத்தின் முன் சமர்பித்தார். மனுதாரருக்கு தகவல்கள் வழங்கப்பட்டுள்ள நிலையில் இவ்வழக்கானது முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகிறது.

**ஒம்/-(முகம்மது ஷகீல் அ்தர்)**
**மாநில தலைமை தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

**<u>வழக்கு எண்-CP-4529/SCIC/2022</u>**

பெறுநர்

**பொது அதிகார அமைப்பு:-**

பொதுத் தகவல் அலுவலர்/
அரசுச் சார்பு செயலாளர்
பொது (சிறப்பு அ) துறை
தலைமைச் செயலகம்,
**சென்னை** 600 009.

**மனுதாரர்:-**

திரு M. காசிமாயன்
எண்.70 தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய குடியிருப்பு
அயப்பாக்கம்,
**சென்னை** 600 077.

JJ/PS